பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்!
நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
இல. 423 (247) கே. கே. எஸ் வீதி, சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: இராஜகோபால் சந்திரன்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்
New Eelam Jewellery Mart
No.423,(247)K K S Road Sivan Kovi addv Jaffna.
(சண்முகம் சேனீச் சாலைக்கு அருகாமையில்)
Prop: AJAKOPAL CHANDRAN

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ பங்குனி மீ 23 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 17 (05 04 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:46

★இந்திய அரசுக்கு பிரபா அனுப்பிய ஆகப்பிந்திய கடிதம்

# தமிழர் அபிலாஷைகளை உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தம் வேண்டும்

## அதற்கு இந்தியா உறுதி தந்தால் ஆயுதங்களை ஒப்படைத்துப் பேசத் தயார்

### தமிழகத்தில் புலிகளின் முக்கிய பிரமுகர் தகவல்

— சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன் —

சென்னை, ஏப்ரல்5

இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யக்கூடிய தமிழர் அமைப்புக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய, 14 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒன்றை இலங்கை அரசு கொண்டுவரவேண்டும்.

அவ்வாறு செய்யப்படும் என இந்திய அரசு உறுதி தந்தால், தமிழீழ விடுதலைப் புலிகள், ஆயுதங்களை ஒப்படைத்து இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், ஆகக் கடைசியாக [மார்ச் மாத நடுப்பகுதியில்] இந்திய அரசுக்கு அனுப்பிய பதில் கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம.

இந்தத் தகவலைச் சென்னையில் உள்ள புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர், உதயனின் சிறப்புப் பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

திரு. பிரபாகரனின் கடிதத்தில் பல விடயங்கள் அடங்கியிருப்பதாகத் தெரிவித்த அந்தப் பிரமுகர் சம்பந்தப்பட்ட அம்சம் பின்வருமாறு அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

அது வருமாறு:

ஆயுதங்களை ஒப்படைக்கப் புலிகள் தயார். ஆனால் அதற்கு முதலில் விடுதலைப் புலிகளின் தேவைப்பாடு ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும். அந்தத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதாக இந்தியா தகுந்த உறுதிமொழி வழங்கினால் நாம் ஆயுதங்களை ஒப்படைப்போம்.

இலங்கை அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையும், மாகாண சபைச் சட்டத்தையும் தமிழ் அமைப்புக்கள் எவையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் அமைப்புக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய — ஈழத் தமிழர் அபிலாஷைகளைத் திருப்தி செய்யக்கூடிய — 14 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படும் என இந்தியா உறுதி அளிக்கவேண்டும்.

''14ஆவது அரசமைப்புத் திருத்தம்'' என்ற சொல் கடிதத்தில்விசேடமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கத்துக்கான அரசமைப்புத்திருத்தமும். மாகாண சபைக்கான சட்டமும் தமிழர் பிரதிநிதிகளிடம் இந்தியா மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என இணையமைச்சர் திரு சிதம்பரம்—கூட்டணிப் பிரமுகர்கள் சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டிருந்தது.

#### தன்பாட்டில் நிறைவேற்றியது

ஆனால் தமிழர் அமைப்புக்களிடமோ, இந்தியாவிடமோ இந்தச் சட்டங்களைச் சமர்ப்பிக்காமல் இலங்கை அரசு தானேச் சையாகத் தன்பாட்டில் [6 ஆம் பக்கம் பார்க்க]

## அமெரிக்காவில் வாழும் தமிழ்ப் பெண்ணின் முன்மாதிரி . . . !

அச்சுவேலி, ஏப் 5

அமெரிக்காவில் வசிக்கும் தமிழ்ப் பெண்மணி திருமதி மீனா ஸ்ரீகரன் வளலாயில் பாதிப்புக்குள்ளாகிய குடும்பத்திற்கு 6 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக அனுப்பினார்.

அச்சுவேலி வளலாய் பகுதியில் கடந்த வருடம் மே மாதம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் ஒரே நாளில் கொல்லப்பட்டனர்

இந்தக் குடும்பத்தில் உயிர் பிழைத்திருக்கும் திருமதி நந்தா, செல்வி இ. வளர்மதி இ. ரகுமதி ஆகியோருக்கு திருமதி மீனாஸ்ரீதரன் 6 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக அனுப்பியிருந்தார்.

யாழ் லின்னர் வில் சமூகத்திற்கு ஊடாக வழங்கப்பட்ட ஆறுயிரம் ரூபாவிற்கும் கால் நடைகள் மற்றும் பொருள்கள் வழங்கப் பட்டுள்ளன. (ஓ-11)

## குருநகர் மீனவர் மூவர் விசாரணையில்

குருநகர், ஏப். 5

மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்டுள்ள நேரத்தில் கடற்றொழிலுக்குச் சென்றனர் என்று கூறப்படும் மூன்று குருநகர் மீனவர்கள் இந்திய அமைதிப் படையினரிடம் அகப்பட்டுக்கொண்டதை அடுத்து விசாரணைக்காக முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தொழிலாளர்களை மீட்கச் சென்ற மனைவி மாரிடம் கடற்றொழில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைப் பகுதியில் ஸ்ரீலங்கா ராணுவத்தின் புதிய பத்து முகாம்கள்

திருகோணமலை, ஏப்

திருகோணமலை நகரை அண்டியுள்ள பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிதாகப் பத்து முகாம்களை அமைத்துள்ளனர்.

சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் முகமாகவே இந்த முகாம்கள் அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது

அபயபுர, மிகிந்தபுர, ஆண்டான்குளம், 4ஆம் கட்டை, 6ஆம் கட்டை, மட்கோவ் ஆகிய பகுதிகளிலேயே இந்தப் பத்து முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய முகாம்கள் அமைக்கப்பட்டதை எதிர்த்து பல இயக்கங்கள், ஸ்தாபனங்கள், தனிப்பட்டவர்கள் பகஜர்கள் மூலம் இந்திய அமைதிப்படையினரிடம் முறையிட்டுள்ளனர் (ஓ-150)

#### தாக்குதல்

பக்தாத் ஏப் 4

மூன்று நாள் இடைவெளியின் பின்னர் ஈரான் மீது விமானத் தாக்குதலை ஈராக் நேற்று ஆரம்பித்தது,

சுபநேரம்
5 - 4 - 1988
பங்குனி 23
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.38 முதல் 12.08வரை
ராகுகாலம்:
3.08 முதல் 4.38 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

#### எரிபொருள் விநியோகம்:

## புதிய பங்கீட்டு முறை நேற்று முதல் அமுல்

யாழ்ப்பாணம், ஏப். 5

இதுவரை அமுலில் இருந்த பெற்றோல், டீசல்பெர்மிட்முறைக்குப் பதிலாக பங்கீட்டு முறை நேற்று நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

எரிபொருள்கையிருப்புக் குறைவு காரணமாகவே இந்தப் பங்கீட்டு முறை கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், எரிபொருள் வந்து சேர்ந்ததும் விநியோகம் தாராளமாகிவிடும் என்றும் கட்டுப்பாடற்ற முறையில் வழங்கப்படும் என்றும் எரிபொருள் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் உள்ள எரிபொருள் கூட்டுத்தாபனங்களில் கையிருப்பு நிலைமை சீர்திருந்தவதைத் தொடர்ந்து விநியோக முறையில் மாற்றம் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விநியோகிக்கப்படும் எரிபொருள் பற்றிய விவரங்கள் வாகனங்களுக்குரிய இன்ஷூரன்ஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

வாரம் ஒன்றுக்கான புதிய விநியோக நடைமுறை வருமாறு:

★ 70 சிசி வரையான [6 ஆம் பக்கம் பார்க்க]

## ராமானுஜம் கப்பலில் இன்று காங்கேசன் வரும் அகதிகள்

காங்கேசன்துறை ஏப். 5

காங்கேசன்துறைக்கு இன்று வரும் இலங்கை அகதிகள் 577 பேரையும் அழைத்து வந்து தங்குமிட வசதிசெய்து சொந்த இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றிவரும் முதலாவது கப்பல் இன்று நண்பகல் அளவில் காங்கேசன் துறைமுகம் வந்தடைகின்றது

ராமானுஜம் கப்பலில் 151 குடும்பங்களைச் சேர்ந்த 577 பேர் வருகிறார்கள்.

இவர்கள் கப்பலில் வந்து இறங்கியதும் 10 இ. போ. ச. பஸ்கள்

#### ஏற்பாடுகள் பூர்த்தி

-காங்கேசன் செய்தியாளர்: எஸ் ஆர் ஞானசுந்தரம்-

இவர்களை நடேஸ்வராக் கல்லூரி முகாமுக்குக் கொண்டு செல்லும். அங்கு தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தினர் குளிர்பானமும். உணவுப் பார்சல்களும் வழங்குவர்

அடுத்து குடிவரவு இலாகா, சுங்கஇலாகா, சுகாதாரப்பகுதி. தேசிய புலனாய்வு, புனர்வாழ்வு அமைச்சு, யு. என் ஓ ஆகியவற்றின் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் அகதிகளின் விவரங்களைப் பதிவு செய்வர். இங்கு வைத்துக் குடும்பத்துக்கு 2000 ரூபா வீதம் நிதி உதவியும் வழங்கப்படும்.

இதை அடுத்து தங்குவதற்காக அமைக்கப் பட்டுள்ள மண்டபங்களில் அகதிகள் தங்கி ஆறுதல் எடுப்பர். பின்னர் புதன்கிழமை இ. போ ச. பஸ்களில் சொந்த இடங்களுக்கு இலவசமாக அழைத்துச் செல்லப்படுவர்கள்

நடேஸ்வராக் கல்லூரி தங்குமிடத்தில் அகதிகள் நலன் கருதி 20க்கு மேற்பட்ட மலசல கூடங்கள், 10 குளிக்கும் தொட்டிகள், விசேட மின் இணைப்புகள் ஏற்படுத் [6 ஆம் பக்கம் பார்க்க]

#### கல்முனைச் சம்பவம்:

## விசாரணைக் கமிஷன் நியமிக்கக் கோருகிறது ஈ. பி. ஆர். எல். எவ்.

கொழும்பு, ஏப். 5

கல்முனைப் பகுதியில் நடைபெற்ற வன்செயல்கள்பற்றி விசாரணை செய்ய பாரபட்சமற்ற கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்.

இப்படி ஈ. பி ஆர். எல். எவ். இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனைப் பிரதேச மக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டிக்கத்தக்கது.

சமாதான ஒப்பந்த அமுலாக்கத்தைத் தடை செய்யும் விதத்தில் இச் சம்பவங்கள் அமைந்துள்ளன.

இரத்தக் களரி மூலம் இனவாதத்தைக் கிளப்பி விடும் முயற்சிக்கு அடிபணியக்கூடாது என்றும் ஈ பி. ஆர். எல். எவ். இயக்கம் தெரிவித்தது (ஓ-எ)

## மேலும் 4 கிளைகளில் நகைகள் மீளளிப்பு

அடகு நகைகளை மீளளிக்கும் பணி அடுத்த கட்டமாக மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தை சுன்னாகம் சாவகச்சேரி, ஊர்காவற்றுறை கிளைகளுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளது.

மக்கள்வங்கியின்பிராந்திய முகாமையாளர் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்நகரில் இரு வங்கிக் கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட மீளளிப்பு நடவடிக்கைகளில் எதுவித பிரச்சினைகளும் ஏற்படாத காரணத்தினால் இரண்டாவது கட்ட நடவடிக்கையாக இந்த விஸ்தரிப்பு (6ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி எக்ஸ்றே படப்பிடிப்பாளர்கள் கதிரியக்கக் கசிவினால் பாதிப்பு

கொழும்பு, ஏப். 5

அரசு ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் எக்ஸ்றே படப்பிடிப்பாளர்களில் 20 பேர் கதிரியக்கக் கசிவினால் பாதிக்கப் பட்டிருக்கின்றார்கள்

பொதுச் சேவை சுதந்திரத் தொழிற் சங்கங்கள் நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரிய வந்திருக்கிறது.

இதனால கயரோகம், இரத்தச்சோகை, இரத்தப்புற்று, கண்களில் கட்டரக்ட் ஏற்படுதல் ஆகிய நோய்கள் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளன.

ஓர் எக்ஸ்றே படப்பிடிப்பாளருக்கு அங்கவீனமான குழந்தை பிறந்தது.

எக்ஸ்றே படப்பிடிப்பாளர்களான கணவன் மனைவிக்கும், அங்கவீனமான குழந்தை பிறந்தது.

தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் திரு. கே குகதாஸன் இது சம்பந்தமாக சுகாதார அமைச்சுக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறார். (ஓ-எ)

#### முச்சந்தி முரளி



அப்ப ஆஸ்பத்திரியிலை கேலை செய்யிற எக்ஸ்ரே படப் பிடிப்பாளர்மார், தன்னை உருகி வெளிச்சம் குடுக்கும் மெழுகுதிரி மாதிரி எண்டு சொல்லலாம். . . . . !

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியாவின் தாக்கத்தினால் பாதிக்கப்படும் கிளிநொச்சி

— கிளிநொச்சி மாவட்டச் செய்தியாளர் —

கிளிநொச்சியில்கடந்த காலங்களை விட இம் மலேரியாவின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் கிளிநொச்சியில் வசிப்பவர்கள் மட்டுமன்றி இங்கு இடையிடையே வந்து செல்வோரும் மலேரியாவினால் பாதிக்கப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டம் சுகாதாரத்தில் தன்னிறைவு காணாத மாவட்டம்.

இங்கு காட்டு நிலங்களும் நீர்த்தேக்கங்களும் மக்கள் வசிப்பிடங்களோடு பின்னிக் கிடக்கின்றன.

இதனால் நுளம்பின் பெருக்கமும் இங்கு அதிகமாக இருக்கிறது இதனாலேயே ஏனைய மாவட்டங்களை விட கிளிநொச்சி அடங்கலாக வன்னிப் பிரதேசத்தில் மலேரியா தடை மருந்து தெளிக்கும் பணி தீவிரப் படுத்தப்பட்டிருந்தது.

## மருந்து தடைப்பட்டது

ஆனால் கடந்த கால அசம்பாவிதங்களினால் மலேரியா தடைமருந்து வருகை தடைப்பட்டது.

மலேரியா தடைமருந்து விசிறும் பணி முற்றாக கிளிநொச்சி மாவட்டத்தில் தடைப்பட்டது.

இதனால் நோயின் தாக்கம் அதிகரித்தது.

பலரது வேண்டுகோளைத் தொடர்ந்து சண்துடைக்கும் பாணியில் யானைப்பசிக்கு அரிசி பொரிபோல சுமார் 500 பெட்டிகள் வரையிலான மலர்த்தியோன் கொண்டு வரப்பட்டு விசிறுதல் ஆரம்பமானது.

இது இவ்வாறிருக்க நாட்டு நிலைகாரணமாக பல கட்டிட இடிபாடுகள் வயல், வாய்க்கால், வளவுகள் யாவும் துப்பரவு செய்ய முடியாத நிலையில் காடு மண்டிய நிலை.

## ஹெலிமூலம்

இக்கால கட்டத்தில் கிளிநொச்சிபட்டினமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி சீரான வடிகாலமைப்பு முறைகள் இல்லை.

சீரான மலசல கூட வசதி இல்லை. சீரான ஒழுங்கமைக்கப்பட்ட வீடுகள் கிடையாது.

நூற்றுக்கு 90 வீதமானவர்கள் ஏழை விவசாயிகளும் கூலி வேலை செய்வோருமே.

இங்கு வாழ்பவர்களில் கூடுதலான மக்கள் மலையக மக்களும், தென்பகுதி அசம்பாவிதங்களினால் அகதிகளாக வந்தவர்களுமே.

இதனால் இவர்களுக்கு தம்மை நுளம்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள போதிய வசதியோ, இடவசதியோ இல்லை. போதிய சுகாதார கல்வி அறிவு குறைவு.

இதனால் கூடுதலானவர்கள் மலேரியாவின் தாக்கத்திற்கு ஆளாகினர்.

இவ்வேளையில் யாழ்ப்பாண அசம்பாவிதம், முல்லைத்தீவு அசம்பாவிதம் காரணமாக பல இடத்து மக்களும் கிளிநொச்சிக்கு படை எடுத்தனர்.

இதனால் நோயின் பெருக்கம் அதிகரித்து கட்டுக்கடங்காத நிலை உருவெடுத்தது.

கிளிநொச்சியிலுள்ள ஒரு சில பொதுஸ்தாபனங்களின் முயற்சியால் மலேரியா தடை மருந்து ஹெலிக்கொப்டர் மூலம் இரண்டு தடவையாக கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டது. லொறிகள் மூலமும் எடுத்துவரப்பட்டது.

ஆனால் எவ்வளவுதான் மருந்து வந்தபோதிலும், வைத்திய சேவைகள் அளித்த போதிலும் மலேரியாவின் தாக்கம் இன்று வரை நீடித்தவண்ணம் உள்ளது.

இதன் தாக்கத்தினால் பலர் நிரந்தர நோயாளர்களாகி மலேரியா குளிசைகளை தொடர்ச்சியாக பாவித்து குளிசையின் தாக்கத்தினால் இளையவர் முதல் வயோதிபர்வரை பாதிக்கப்பட்டிருப்பதனையும், காய்ச்சலின் கொடுமையினால் உயிர் இழந்திருப்பதனையும் நாம்கண்ணூடாக காண முடிகின்றது.

ஆகவே இது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கிளிநொச்சியில் மலேரியாவின் தாக்கம் பற்றி அக்கறை கொண்டு ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு இம்மாவட்டத்தில் மலேரியாவை பூரணமாக அழிக்க வழி வகுக்க வேண்டும்.

(இ-76)


# S. P. ANTON

## மகிழ்ச்சியுடன் வழங்கும் உடனடிப் பயண ஒழுங்குகள்

### ● குவைத், சவூதி அரேபியா

இவ்விருநாடுகளின் கப்பற் துறைமுகங்களில் பணிபுரிவதற்குக் கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன.
Supervisors, Tally Clerks, Drivers, Fork Lift Operators, தச்சுவேலையாட்கள், மேசன், செக்கியூரிட்டிஊழியர்கள், மெக்கானிக், ஸ்டோர் கீப்பர், கிளீனர்கள் மற்றும் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை.

### ● அபுதாபி

வீட்டு வேலையாட்கள், அலுவலகஉதவியாட்கள் (பியூன்), வீட்டுப்பணிப்பெண்கள்.

### ● சிங்கப்பூர், கிறீஸ

இருநாடுகளுக்கும் ஆங்கில அறிவுடைய வீட்டு வேலைப் பணிப் பெண்கள் உடனே தேவை.
சம்பளம் ரூபா 3,500/- — 6,500/- வரை

### ● கப்பல் வேலைவாய்ப்புக்கள்

'Nomikos' மற்றும் தரமான கிரேக்கக் கப்பல்களில் Officer Vacancies உடன், A/B, Deck Boys, Mess Boys, Wiper முதலிய வெற்றிடங்கள் உண்டு. நம்பிக்கையுடன் பயணம் ஒழுங்கு பண்ணித் தரப்படும்.

## கனடா பயண ஒழுங்குகள்

நம்பிக்கையான எமது முகவர் மூலம், சிங்கப்பூரில் இருந்து சிறு குழுக்களாகக் கனடாவுக்கு அனுப்பும் எமது பணி வெற்றிகரமாகத் தொடர்கிறது. அடுத்த குழுவுக்கு இன்னும் ஆறு வெற்றிடங்கள் உள்ளன. விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

✶ சவூதி அரேபியாவில் கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு பத்து நாட்களில் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும். உடனடியாகப் பயணம் மேற்கொள்ளத் தயாராயிருப்போர் மட்டும், காலம் தாழ்த்தாமல் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| Land Surveyors — | SR. 1200 |
| Chain men — | SR. 900-1000 |
| Draughtsmen — | SR. 1000 |
| Technical Assistant - | SR 800 |
| தொழிலாளர்கள் - | SR 350 |
| Electricians - | SR 800 |
| Asst. Electricians | SR 700 |
| Radiator Repairer / Tinker - | SR 1000 |
| Welder - | SR 1000 |

முக்கிய அறிவிப்பு:- என்னிடம் பாஸ்போட் கையளித்திருக்கும் கீழ்க்கண்டோர் தயவு செய்து, உடனடியாக கொழும்பில் வந்து என்னைச் சந்தியுங்கள். உங்கள் பயணக் ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டுள்ளன

OILERS:- S. J. செல்வலிங்கம் – யாழ்ப்பாணம்
A. C. பெனடிக்ற் - யாழ்ப்பாணம்
தொழிலாளர்கள்:- S. மகேந்திரன் - யாழ்ப்பாணம்
K. X. செல்வநாயகம் - ஊர்காவற்றுறை
S. சிவம் - இருபாலை
M. H. M. இக்பால் – முல்லைத்தீவு
A. F. சேவியர் - யாழ்ப்பாணம்
A. வேதநாயகம் – யாழ்ப்பாணம்
N. சிவனேஸ்வரன் - அனலைதீவு

மற்றும் சகல விபரங்களுக்கும், உடனே நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

## S. P. அன்ரன்

வேல் ரேடர்ஸ் [மக்கள் வங்கி முன்பாக]
இல. 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான பெயின்ற் வகைகளையும்
நம்பிக்கையுடன் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்
வேல் ரேடர்ஸ், [மக்கள் வங்கி முன்பாக]
இல. 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [2384]


# சட்ட சபைத் தேர்தலை ஒத்திவைப்பின் மாநில மட்டத்தில் போராட்டம்

## வீரப்பன் எச்சரிக்கிறார்

சென்னை, ஏப் 4 சட்டசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் அல்லது தாமதமானால் தமிழகம் முழுவதும் எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படும்.

முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன் அ. தி. மு. க. (ஜா) கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. வீரப்பன் மேலும் சொன்னதாவது;

இறுதியில் ஜானகி ராமச்சந்திரன் அணி தி.மு க.வில் இணைந்து விடுவர் என்று இந்திரா காங்கிரஸினரும் அவர்களின் கூட்டாளிகளும் பொய்ப் பிரசாரஞ் செய்கின்றனர்.

துரோகச் செயல்களுக்கு மத்தியிலும் எமது அணி பலமாக உள்ளது. தி. மு. க. டன் சேர வேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

தி.மு.க. விரும்பினால் அவர்களுடன் தேர்தல் உடன்பாட்டுக்கு வருவதை நாம் எதிர்க்க மாட்டோம்.

இப்படி இராம வீரப்பன் சொன்னார். (எ)

# முதுகில் குத்தியவருக்கு என்ன நன்றி சொல்வது?

## ஜானகி அணி கேள்வி!

'பாரத ரத்னா' விருதைப் பெற்ற பின்னர் அங்கு நின்ற பிரதமர் ராஜீவ் காந்திக்கு திருமதி ஜானகி இராமச்சந்திரன் ஏன் நன்றி தெரிவிக்கவில்லை?

கோயம் புத்தூரில் நடந்த அ. தி மு க. [ஜெ] பொதுக்கூட்டத்தில் இக்கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டது.

மறைந்த முதல் அமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு பாரதரத்ன விது அளிக்கப்பட்டது. புதுடில்லி சென்று ஜானகி அம்மாள் அதைப் பெற்று கொண்டார்.

முதுகில் குத்தியவர் அருகில் நின்றார் அவருக்கு ஏன் நன்றி தெரிவிக்க வேண்டும்?

அதனால் திரு காந்தியைப் புறக்கணித்து விட்டு ஜானகி அம்மாள் சென்னை திரும்பினார்.

முதுகெலும்பு உண்டு என்பதைக் காட்டிய ஜானகி அம்மாளை நாம் பாராட்ட வேண்டும்

இப்படி முன்னாள் அமைச்சர்கள் ப. உ. சண்முகம், முத்துசாமி, வலம்புரிஜான் எம். பி. ஆகியோர் பேசினர்.

# இந்திரா காங்கிரஸுடன் எம்.ஜி.ஆர் பாணியில் கூட்டணிக்குத் தயார்

## ஜெயலலிதா அறிவிப்பு

இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச் சேர எனது தலைமையிலான அ. தி. மு.க. அணி விரும்புகிறது.

செல்வி ஜெயலலிதா முன்கண்டவாறு தெரிவித்தார்.

'ஜெ' அணியின் அரசியல் குழு கூடத்த சனி சென்னையில் நடைபெற்றது.

அதன் பின்னர் செல்வி ஜெயலலிதா செய்தியாளர் மத்தியில் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது:

இந்திரா காங்கிரஸுடன் எமது அணி கூட்டுச் சேர விரும்புகிறது.

ஆனால் தொகுதி உடன்பாடு, மறைந்த முதல் அமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் வகுத்த திட்டத்தின்படி இருக்க வேண்டும்.

சட்டசபை ஆசனங்களில் 3 இல் 2 பங்கு அ. தி. மு. க. ஜா) அணிக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால் கூட்டுச் சேரத் தயாராக உள்ளோம்.

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னார். (ஒ)


## கலர் பாஸ்போட் படங்கள்

பாஸ் போட்டுக்கு தேவையான கலர் படங்கள் எடுப்பதற்கு நாடவேண்டிய இடம்

### அசோகா போட்டோ

225, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

ஸம்பியாவில் கடந்த பத்து வருடங்களாக Accountant ஆகதொழில்புரியும்இந்துவேளாள உயர் குலத்தைச் சேர்ந்த குடிப்பழக்கங்களற்ற 34 வயது 5' 9'' உயரமுள்ள மணமகனுக்கு ஒரு அழகான படிப்பறிவுள்ள குறைந்தது 5' 4'' உயரமான செவ்வாய் தோஷமற்ற மணமகளை பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். சீதனம் முக்கியமல்ல. சாதகக் குறிப்புடன் அண்மையிலெடுத்த புகைப்படத்தையும் அனுப்பி வைக்கவும். யாவும் Confidential ஆக அனுசரித்து திருப்பித் தரப்படும்.
விளம்பர இலக்கம் 123, C/o உதயன்
(2386)

## Jaffna -- Colombo -- Jaffna

### Air Cargo & Air Mail Courier Service

Mack Communications & Travels, Jaffna offers a charter air cargo service from JAFFNA TO COLOMBO AND BACK on Cessna 206 Stationair aircraft UPALI to be used by Cargo consolidators, Distribution Agencies, Trading firms etc.,

Mack Communication & Travels, Jaffna is also operating an airmail courier serviee from JAFFNA TO COLOMBO and back & also we under take all types of small parcels and letters to be delivered in Colombo.

For details, Please enquire:

### MACK
Communications & Travels

No. 8, 1st Lane,
Point-Pedro Road, Jaffna.

In Colombo contact:

### UPALI TRAVELS LIMITED,

[GSA for Upali Aviation (Pte) Limited]
34, Galle Road, Colombo-3.
Tel: 20465, 29399, 28826.

## யாழ். - கொழும்பு விமான சேவை

பலாலிக்கு விசேஷ போக்குவரத்து வசதிகளுடன் ஒழுங்காக நடைபெறுகின்றது.

### இன்று

வெற்று ஆசனங்கள் உண்டு.

ஏமாற்றத்தைத் தவிர்க்க உடன் ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

Film roll Processing & Printing Accepted. Delivery within 3 days. Special discount for Studios and bulk orders.

வெளிநாடுகளுக்கு விமான ரிக்கற், பாஸ் போட் Renewal and Alteration and Bonding, Visa, Indian Visa, Confirmation, Reconfirmation and Cancellation ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

### MACK
Communications & Travels

இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## SCIENCE ACADEMY, Nallur

கோயில் முன்பாக பருத்தித்துறை வீதி. நல்லூர்.

### SPECIAL ENGLISH CLASSES

1. 10ஆம்/11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பு: 8 மாதம்.
நேர அட்டவணை:- புதன் 3.15—4.30 P M.
ஞாயிறு 3.00—4.30 P M
2. வயதுவந்தவர்களுக்கான வகுப்பு:- 6 மாதம்-கட்டணம்: 450/-
விண்ணப்பப்பணம்:- 50ரூபா கட்டியவர்களிமாத்திரம் அனுமதிக்கப்டுவர்.
ஆரம்பம்: 30-3-88புதன் 3.15 p.m.
நேர அட்டவணை:-புதன்/ஞாயிறு 4.30—6.00 P. M.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை பயிரிட்ட விவசாயிகள் பாதிப்பு

## உரிய விலை இடைக்கவில்லையாம்

கொக்குவில், ஏப் 5 எதிர்பார்த்த விலைக்கு புகையிலைச்செடி விலை போகாததால் புகையிலை பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கடன் பட்டும் உள்ள நகைகளை அடகு வைத்தும் இம்முயற்சியிலீடுபட்ட அவர்கள் தமது கடனை அடைக்கும் வழி தெரியாது கலங்குகின்றனர்.

புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் அதிக அக்கறை காட்டாததும் கடந்த போக விளைச்சலில் கிடைத்த புகையிலை இருப்பிலிருப்பதுமே இந்நிலைக்கு காரணம் எனக் கருதப்படுகின்றது.

புகையிலைப் பயிர் வாங்குவோர் இல்லாமையால், தாமே அவற்றை வெட்டி உணர்த்தி புகை போடும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (இ-69)

---

### 3ஆம் வருட நினைவஞ்சலி



**திருமதி பீற்றர் மேரிரேஸ் (கிளி)**

அன்னையின் அணைப்பில் 1957 - 10 - 16 ஆண்டவன் அழைப்பில் 1985 - 4 - 5

எம் கண்ணில் உம் நினைவுகள் நிழலாட
நீர் விண்ணில் வாழ்வதேனோ? மண்ணில்
எம்மை மகிழ்வித்தகாலம் போதுமென்றோ?
எம் எண்ணமெல்லாம் உம் நினைவாய்
வண்ணமுகம் மண்ணகத்தில்
காணத்துடிக்கிறோம்

உம்பிரிவால் துயருறும்
அன்புக்கணவன், அம்மா
சகோதரர்கள் உறவினர்கள்
மாமாமார், மாமிமார்.

இல. 4 அடம்பன் ரோட்,
யாழ்ப்பாணம். (2255)

---

### எப்போது திறக்கப்படும்?

கொழும்பு, ஏப். 5 மட்டக்களப்புப் பல்கலைக் கழகத்தை எப்போது திறப்பது? என்பது பற்றி இம்மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை முடிவு செய்யப்படும்.

மட்டக்களப்புப் பல்கலைக் கழக ஆளுநர் சபை அன்றைய தினம் கூடி முடிவு செய்யும்.

இந்திய அமைதிப்படையினர் கடந்த டிசம்பரில் ஆரம்பித்த தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து பிரஸ்தாப பல்கலைக் கழகம் மூடப்பட்டது தெரிந்ததே. [ஒ-எ]

---

### மேதினம் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 5 மேதினக் கொண்டாட்டத்தைப் பரந்த அளவில் கொண்டாடுவதற்கு வடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி தீர்மானித்துள்ளது.

இடதுசாரி அரசியற் கட்சிகள் இணைந்து சகல வெகுஜன அமைப்புக்களையும் உள்ளடக்கிய ஒரு பரந்துபட்ட ஐக்கிய மேதின ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்துவதெனவும் நேற்று நடந்த தொழிற் சங்க கூட்டுக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [ஒ-எ]

### ஒத்துழைப்புக்கு நன்றி

கிளிநொச்சி, ஏப்ரல் 5 கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று நாள் ஹர்த்தால் பூரணவெற்றியளிக்க ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டப் பிரசைகள் குழுவால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-க-76)

### பஸ்கள் கடனுக்கு

கொழும்பு, ஏப்ரல் 5 இந்தியாவில் இருந்து விசேட கடன் வசதித் திட்டத்தின் கீழ் 155 பஸ்களை இலங்கை வாங்கும்

இது சம்பந்தமான பேச்சுக்களை நடத்த இலங்கை அரசுக் குழு ஒன்று கடந்த புதன் கிழமை இந்தியா பயணமானது. (ஒ-எ)

---


## Further Education Programme

OF

**Uduvil Girl'S College**

**பாலர் வகுப்பு ஆசிரியர் பயிற்சி**

(Pre - School Teacher's Training)

மேற் குறிப்பிட்ட ஓராண்டு பயிற்சிநெறி உடுவில் மகளிர் கல்லூரி தொடர் கல்விப் பிரிவினால் நடத்தப்படும்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இப்பயிற்சி நெறியில் சேரலாம் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பல்கலைக்கழக, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள் பகுதி நேர விரிவுரைகளை நடத்துவார்கள்.

மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு பயில விரும்பும் மாணவிகள் 20-4-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பதாரிகள் திங்கட்கிழமை (25-4-88) சமுகமளிக்கவும்.

-DIRECTORS

---

## கம்பியூட்டர் கல்வி

**Computer Programming in Basic Language**


ஆரம்பம்: நாளை 6 - 4 - 1988
பயிற்சிக் காலம்: 40 நாள்
கட்டணம். 750 /- (இருபிரிவுகளாக செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்
சான்றிதழ் வழங்கப்படும்

**UNIKCO**
**Computer Centre**

No, 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (உபதபாற்கந்தோர் அருகாமை)


---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கந்தர் வேலுப்பிள்ளை**

மலர்வு: 5 - 2 - 1908
உதிர்வு: 6 - 3 - 1988

எங்கள் குடும்பத்தின் தலைவராகவும் பாசத்தின் உறைவிடமாகவும் இந்து சமயத்தின் பால் அளவற்ற பக்தியும் கொண்டும் எம்மை வழி நடத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எம் மயெல்லாம் விட்டுப் பிரிந்து நாட்கள் பல மறைந்தாலும் எங்களது நெஞ்சத்தில் என்றென்றும் அணையாத சுடராக ஒளி வீசும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி காந்திமதி
ஆருயிர் பிள்ளைகள்

கனகம்மா, விசுவலிங்கம், கனகேஸ்வரி, கணேசலிங்கம், சுந்தரலிங்கம், யோகேஸ்வரி, இராஜேஸ்வரி,

அன்னாரின் இல்லத்தில் (5 - 4 - 1988) இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறும் அன்னாரதுஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் படியும் உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ரஜனி பிடா ஸ்ரோர்ஸ்,
இமையாணன்,
உடுப்பிட்டி.

[2300]

---


# RIETAS ENTERPRISES

## A. பத்மதாஸ்

# பிரயாண ஒழுங்குகள்

மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பலவித பதவிகளுக்கான பிரயாண ஒழுங்குகளையும் தாமதமின்றி நம்பிக்கையுடன் எமது புதிய முகவர் மூலம் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

★ சவூதி ★ குவைத் ★ டுபாய்

வெற்றிடங்கள் (1) கனரக வாகன சாரதிகள் (2) சிகை அலங்கரிப்பாளர்கள் (3) சுத்திகரிப்பாளர்கள் (4) கூலிவேலையாட்கள் (5) பணிப்பெண்கள்.

சிங்கப்பூர் நாடடுக்கான பணிப்பெண்கள் பதவிகளுக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

27 3-88 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டபடி எமது நிலையத்தினூடாக பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரப்பட்டியலின் தொடர்ச்சியாக 23-3-88-இல் பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரம் வருமாறு:

1. சற்குணராசா ஆறுமுகம் - பிரதான வீதி காளுவன், சுழிபுரம்.
2. குருசுமுத்து சுகுமார் - மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
3. வல்லிபுரம் குணரட்ணம் - பெரியவிளான், இளவாலை
4. சின்னப்பு லக்ஸ்மிகாந்தன் - 75 ஐயனார்கோயிலடி, நெல்லியடி, கரவெட்டி.
5. கபிரியேல் ஜோசப் அமலராஜா - பெரியவிளான், இளவாலை.
6. செல்லையா யோகேஸ்வரன் - சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.
7. சின்னத்தம்பி சச்சிதானந்தம் - ஏழாலைமத்தி, ஏழாலை.
8. அந்தோனிப்பிள்ளை அன்ரன் டொமினிக் (சந்திரன்) உயரப்புலம், ஆனைக்கோட்டை.

23-3-88 பிரயாணத்துக்கான சகல ஒழுங்குகளும் பூர்த்தியாகியும் பயணத்தை மேற்கொள்வதற்கு சமுகமளிக்காத இருவரும் தயவுசெய்து மேற்கொண்டு தாமதிக்காது உடனடியாக எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

1. பாக்கியநாதன் விஜயகுமார் - 25, காந்தாலேன், நாவாந்துறை, யாழ்ப்பாணம். 2. இராசதுரை பேசுதாசன் - கொழும்புத்துறை.

நேரில் தொடர்பு கொள்வோர் தினமும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும் கடிதம்மூலம் தொடர்பு கொள்வோர் சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறையையும் இணைத்துத் தொடர்பு கொள்ளலாம்

● முற்பணம் அறவிடப்படமாட்டாது ● காலதாமதம் ஏற்படமாட்டாது

உபமுகவர்
**V. விஜயக்குமார்**
(மாஸ்டர்)
ஊறணி,
வல்வெட்டித்துறை.

தலைமைக்காரியாலயம்
**A. பத்மதாஸ்**
றீட்டாஸ் எண்டபிரைசஸ்
97/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயசங்கற்பம்

கவனமாயிருந்தால் துரதிருஷ்டத்தையும் துரத்திவிடலாம்.

— அயர்லாந்துப் பழமொழி

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22037
05-04-1988 த. பெ. இல:- 28

## மீள்பரிசிலனை செய்க

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் கடந்த வாரம் முதல் மீள ஒப்படைக்கப்படுகின்றன. அடகு நகைகளுக்குரிய பணத்தை ஏற்கனவே செலுத்தியவர்களில் ஒரு சாராருக்கே அவை இப்போது திருப்பி ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே பணத்தைச் செலுத்திய அனைவருக்கும் நகைகளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டிய ஏற்பாடுகளையும், முயற்சிகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்து வருவதாக அறியப்படுகிறது

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி மற்றும் தமிழ் மாவட்டங்களிலும் பொது மக்களால் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் கடந்த 1984 ஆம் ஆண்டு முற்பகுதியில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்தே அடகு நகைகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அப்போது கூறப்பட்டது

மக்கள் கடந்த சுமார் இரண்டு வருட காலமாகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்திய போதிலும், அவர்களது நகைகள் கைக்கு வந்து சேரும் நிலை முற்றாக ஏற்படவில்லை.

இந்தா வந்து விட்டது, அந்தா வருகிறது என நம்பிப் பலர் நகைகளை மீளப்பெறுவதற்குத் தேவையான பணத்தையும் செலுத்தினர். ஆனால் காலம் கடந்ததே அன்றிக் காரியம் கைகூடவில்லை அதனால் பல கஷ்டங்களுக்கு மத்தியில், வேறு இடங்களில் கடன் பெற்றும் பணத்தைச் செலுத்தியவர்கள் இரண்டும் கெட்டான் நிலையில் நின்று தவித்தார்கள்.

அந்தத் தவிப்பும், கவலையும் நீங்கும் விதத்தில் இப்போது நகைகள் மக்களுக்கு கிடைத்து வருகின்றன. அதற்கு வகை செய்யும் விதத்தில் உழைத்த, உதவிய சகலருக்கும் பொதுமக்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை,

பணத்தை ஏற்கனவே செலுத்திய சகலருக்கும் நகைகள் கைக்கு வந்து சேர்வதில் எதுவித இடையூறும் வந்துவிடக் கூடாது என்பதே அவர்கள் வேண்டுதலாக இருக்கும் என்பதும் நிச்சயம்.

அதேபோல, இதுவரை பணத்தைச் செலுத்தாதவர்களும் தமது நகைகளை மீளப் பெறுவதற்கு ஆர்வமாக இருப்பார்கள்.

அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு வங்கி அதிகாரிகள் ஆயத்தமாகி வருவதாக அறியவருகிறது,

ஆனால் நகைகளை அடகு வைத்தோர் பணம் செலுத்தும்வரை 30 சதவீத வட்டி கட்ட வேண்டும் என்ற நிர்வாகத்தின முடிவு குழப்ப நிலையை உருவாக்கி உள்ளது.

நகைகள் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்படாவிடில் அடகுவைத்தோர் உரிய நேரத்தில் பணத்தைச் செலுத்தி அவற்றை மீளப் பெற்றிருப்பர். இல்லையேல் குறிப்பிட்ட காலத்துக்குரிய வட்டியைச் செலுத்தியாவது புதுப்பித்திருப்பர்—

நகைகள் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டதால் அவர்களுக்கு அந்த வசதிகள் மறுக்கப்பட்டுவிட்டன—

ஆகையால் 1984 ஆம் ஆண்டு நகைகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட காலத்தில் இருந்து, அவை மீளளிக்கப்படும் வரை வட்டி அறவிடக்கூடாது— என்ற ஒரு வாத நிலை உருவாகி உள்ளது. அது நியாயமான வாதமே ஆகும்;

இன்றுவரை அடகுவைத்தோர் தாம் அடகு வைத்த நகைகளுக்குரிய பணத்தைச் செலுத்தாமல் இருப்பதற்கு காரணமாக இருந்தது வங்கி நிர்வாகம்.

ஆகையால் வட்டியைச் செலுத்தினால்தான் நகைகளைத் தருவோம் என்ற நிலைப்பாட்டைக் கொள்வது நியாயமாக முடியாது.

எனவே இவ்விடயத்தில் வங்கி நிர்வாகம் நியாயத்தை நிலைநாட்டி, தனது முடிவை மீள்பரிசிலனை செய்வது அவசியம்,

வங்கிகளில் அடகுவைத்தவர்களில் பெரும்பாலானோர் பணவசதி குறைந்தவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், குறைந்த வருமானமுள்ள மக்களே. எனவே அவர்களுக்கு அநியாயம் செய்யாதிருக்க மக்கள் வங்கி நிர்வாகம் பார்த்துக்கொள்வது அவசியம்.

அப்போதுதான் அது உண்மையாகவே மக்கள் வங்கியாக - மக்களது வங்கியாக - மிளிர முடியும்;

## பாகிஸ்தான் அணு நிலையங்களை தகர்க்கும் இஸ்ரவேல் திட்டம் இந்தியாவினால் நிராகரிப்பு

லண்டன், ஏப் 4

பாகிஸ்தானில் உள்ள அணுசக்தி நிலையங்களை அழித்துவிடும் இஸ்ரவேலின் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க இந்தியா மறுத்துவிட்டது.

இத்தகவலை லண்டன் ஒப்சேவ்வர் வார இதழ் வெளியிட்டது

ஜெருஸலம் வட்டாரங்களை ஆதாரம் காட்டி இப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தியாவில் உள்ள ஜம்நகர் விமானத் தளத்தில் இருந்து சென்று பாகிஸ்தானில் கௌகட்டாவில் உள்ள யுரேனியம் நிலையத்தைத் தாக்கி அழிக்க இஸ்ரவேல் இந்தியாவின் ஒத்துழைப்பை நாடியது.

இதற்கு இந்தியா மறுப்புத் தெரிவித்தது.

ஆனால் இஸ்ரவேலோ உயர் சக்தி குண்டு தரும் இடங்கும். இந்திய யுத்த விமானங்களே இதனைச் செய்யலாம்,. என்றும் இந்தியாவைத் தூண்டியது

அதற்கும் இந்தியா இணங்கவில்லை

பாகிஸ்தான் அரபு நாடுகளுக்கு அணுக்குண்டு தயாரிக்கும் பொருள்களை வழங்கக் கூடும் என்ற அச்சம் காரணமாக இஸ்ரவேல் இம் முயற்சியில் ஈடுபட்டது என்றும் ஒப்சேவ்வர் பத்திரிகை மேலும் தெரிவித்தது (எ)

## ‘கிரிங்கோ’ தப்பியதால் சீன விஜயம் தடைப்படாது அக்யூனோ அறிவிப்பு!

மணிலா, ஏப் 4

தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட இராணுவக் கேர்ணல் கிரிங்கோ ஹொனாஸன் தப்பிச் சென்ற சம்பவத்தினால் எனது சீன விஜயம் தடைப்படாது

இப்படி பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொராஸான் அக்யூனோ அறிவித்திருக்கின்றார்.

ஹொனாஸன் தப்பிச் சென்ற சம்பவம் மணிலாவில் பதற்றத்தை ஏற்படுத்தியது

மீண்டும் பிலிப்பீனில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதனிடையில் ஹொனாஸன் சிறைவைக்கப்பட்டிருந்த கடற்படைக் கப்பலின் கப்டன் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

அவர்மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடைபெறவுள்ளது

இச்சம்பவம் குறித்து ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை கூடி ஆராய்ந்தது (எ)

## ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கறுப்பு இனத் தலைவர்?

ஜனநாயகக்கட்சிவேட்பாளர் நியமனம் கறுப்பு இனத் தலைவரான ஜெஸி ஜாக்ஸனுக்குக் கிடைப்பதைத் தடுக்கும் முயற்சியில் அக்கட்சியினரே ஈடுபட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

திரு ஜாக்ஸனை வேட்பாளராக நியமனஞ்செய்வதால், நவம்பரில் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி தோல்வியே அடையும் என்று ஜனநாயகக் கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்தனர்

கறுப்பு இனத்தைச் சேர்ந்தவரை ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம், அமெரிக்கர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்பதே அவர்களின் கருத்து. (எ)

## அமிதாப்பை எதிர்த்துப் போட்டியிடுவேன்! வி.பி.சிங் அறிவிப்பு

நடிகர் அமிதாப் பச்சன் அலஹபாத் இடைத் தேர்தலில் போட்டியிட்டால் நான் அவரை எதிர்த்துப் போட்டியிடுவேன்

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் விஸ்வநாத் பிரதாபசிங் முன்கண்டவாறு சொன்னார்,

செய்தியாளர் மத்தியில் திரு. சிங் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது: சவாலை எதிர்நோக்கத் தயாராக உள்ளேன்.

அலஹாபாத் இடைத் தேர்தலில் உண்மையான மக்கள் பிரதிநிதிதான் வெல்வார். யார் பிரதிநிதி என்பதைப் பணம் தீர்மானிக்க அனுமதிக்க முடியாது.

பெரிய போஸ்டர்கள் ஒட்டப்படமாட்டா பிரசாரத்துக்கு சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள்தான் பயன்படுத்தப்படும்

இப்படி திரு சிங் சொன்னார். (எ)

## சமரசப் பேச்சு

நீண்டகால எல்லைத் தகராறு பற்றி எதியோப்பியாவும் சோமாலியும் பேச்சுக்களைத் தொடக்கியுள்ளன.

இரண்டு நாடுகளின் பிரதிநிதிகள் இச்சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். (எ)

பாப்பரசரின் ஆசியுடன்

## அமெரிக்க அமைச்சரின் சமாதானத் தூது ஆரம்பம்!

### மத்திய கிழக்குப் பிரச்சினையில்

ரோம், ஏப். 4

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மூன்றும் கட்ட முயற்சியை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மேற்கொண்டிருக்கின்றார்

ஜோர்தான், சிரியா, சவூதி அரேபியா, இஸ்ரவேல் நாடுகளுக்கு திரு. ஷுல்ட்ஸ் விஜயம்செய்வார்.

பயணத்தை ஆரம்பிக்கும் முன்னர் திரு ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் வத்திக்கான் சென்று பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்தார்.

மத்திய கிழக்குச் சமாதான தூது வெற்றி பெற அப்போது பாப்பரசர் ஆசி வழங்கினார்

புதிய யோசனைகளைக் கொண்டுவராத பட்சத்தில் திரு ஷுல்ட்ஸின் முயற்சி வெற்றி பெறாது என்று இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் அறிவித்துவிட்டார்

அமெரிக்கா முதலில் சமர்ப்பித்த சமாதான யோசனைகளை இஸ்ரவேல் ஏற்கனவே நிராகரித்துவிட்டது தெரிந்ததே.

இதனிடையில் இஸ்ரவேலுக்கு வரும் திரு ஷுல்ட்ஸுடன் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் நேரடியாகப் பேசமாட்டார்கள்.

விடுதலை இயக்கத் தலைமைப் பீடம் இப்படித் தீர்மானித்து உள்ளது. (எ)

## வி. பி. சிங் தலைமையில் ஐக்கிய எதிர்க்கட்சி!

புதுடில்லி, ஏப் 4

ஐக்கிய எதிர்க்கட்சிக்கு முன்னாள் நிதி அமைச்சர் வி பி சிங் தலைவராக தெரிவு செய்யப்படலாம்

இதுபற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்க திரு. வி. பி சிங் மறுத்துவிட்டார்

எதிர்க்கட்சிகளை ஒன்று இணைக்கும் முயற்சி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

விரைவில் லோகசபைக்கு 12 இடைத்தேர்தல்கள் நடைபெறஉள்ளன.

இத்தேர்தல்களில் பொது வேட்பாளர்களை நிறுத்தும் கருத்து உடன்பாடு எதிர்க்கட்சிகளிடையே ஏற்பட வேண்டும்.

இதுசம்பந்தமான உடன்பாடு நிச்சயமாக ஏற்படும்.

இப்படி திரு. சிங் சொன்னார். [எ]

### வெளி உலகில்

## சவூதி அரேபியாவுக்கு சீன ஏவுகணைகள்! அமெரிக்கத் தூதர் திருப்பி அழைப்பு

வாஷிங்டன், ஏப் 4

சவூதி அரேபியாவுக்கான தனது தூதரை அமெரிக்கா திருப்பி அழைத்து விட்டது.

சவூதி அரேபியா அரசுடன அமெரிக்கத் தூதருக்கு ஏற்பட்ட கருத்து மோதலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை அமெரிக்க அரசு எடுத்தது.

சீனாவிடமிருந்து சில்க்வோர்ம் ஏவுகணைகளை சவூதி அரேபியா வாங்கியிருக்கின்றது.

அதைப் பகிரங்கமாக ரியத்தில் உள்ள அமெரிக்கத் தூதர் கண்டித்தார்.

இதனிடையில் சவூதி அரேபியாவில் உள்ள ஏவுகணை இலக்குகளைத் தாக்கப்போவதாக இஸ்ரவேல் அறிவித்து உள்ளது.

அப்படி தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் சவூதி அரேபியாவுக்கு உதவப் போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ஸியா -உல்-ஹக்கும் பிரதமர் முகமட் ஜுனேஜோவும் சவூதி அரேபிய அரசுக்கு இதனை அறிவித்திருக்கின்றனர். [எ]

## 80 சதவீத நோய்கள் தடுக்கப்படக் கூடியவை

### கருத்தரங்கில் டாக்டர் உரை

பண்டத்தரிப்பு' ஏப் 5

எமது பிரதேச மக்களைப் பீடிக்கும் நோய்களில் 80 சதவீதமானவை சுகாதார விதிகளை கடைப்பிடிப்பதன் மூலம் தடுக்கப்படக் கூடியவை.

அன்றாட வாழ்க்கையில் சுத்தம், சுகாதாரம் பேணுவதன் மூலம்சிறுவர் சிறுமியருக்கு வரும் நோய்களைத் தவிர்க்கலாம்.

தகரத்திலும், போத்தலிலும் அடைத்து வருவதுதான் சத்துணவு என எண்ணுவது தவறு. நமது சூழலில நிறைய சத்துணவுகள் இருக்கின்றன அவற்றை தெரிந்து உணவில் சேர்ப்பது அவசியம்.

டாக்டர் க. ராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

சண்டிலிப்பாய் கொம்பனிப் புலத்தில் ''போரூட்'', பெதுநல ஸ்தாபனம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இப்பகுதி சுகாதார பரிசோதகர், மருத்துவ மாது, மருத்துவ மாதர்களின் மேற்பார்வையாளர் போன்றவர்களும் அறிவுரை வழங்கினர்.

கருத்தரங்கை ''போரூட்'' சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி இ. குலசிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

(இ-120)

### சமய நிகழ்வுகளில்

## தொல்புரத்தில் கும்பாபிஷேகம்

சுன்னாகம் ஏப் 5

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் சம்புரோக்ஷண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளைக் காலை நடைபெறும்.

ஸ்ரீசிவானுபூதி சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதிஷ்டாகுருவாக கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

(இ-27)

## பளையில் கறுப்புப்பட்டி

கொடிகாமம், ஏப் 5

பளைப்பகுதியில் 1987 ஜீ சி ஈ பரீட்சை எடுக்க முடியாமற்போன 150 மாணவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக கறுப்புப் பட்டி அணிகின்றனர்.

(இ 75)

### பொய்யாமொழி



குறள்:

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

பொருள்:

வெள்ளம்போல் அளவற்றதாய் வரும் துன்பமும், அறிவுடையவன் தன் உள்ளத்தில் நினைத்த அளவில் கெடும்.

## யோகாசனப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப் 5

நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் நடத்தும் யோகாசன விழாவும், யோகாசன போட்டியும் மே மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

நல்லை ஆதீனத்தில் நடைபெற உள்ள இந்தப் போட்டிக்கானவிண்ணப்பங்களை மே மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதியில் இருந்து நல்லை ஆதீன மேலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

[இ-க]

## மேலும் மூன்று மாகாண சபைகளுக்கு தேர்தல்

கொழும்பு, ஏப் 5

மேற்கு, தெற்கு, மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கு இணங்க இவற்றுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் திகதி இம் மாதம் 21-ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது

வடமத்திய, வடமேற்கு, சப்பிரகமுவா, ஊவா மாகாண சபைத் தேர்தல்களுக்கான வாக்களிப்பு இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது தெரிந்ததே.

(ஒ-எ)

## ஒத்துழைப்பு மூலமே பாடசாலையின் வளர்ச்சி

### கல்விப் பணிப்பாளர் மன்சூர் கூறுகிறார்

''ஒரு பாடசாலையின் வளர்ச்சியும், தளர்ச்சியும் நேரடியாக உழைக்கும் அதிபரின் சேவையிலேயே தங்கியுள்ளன. தனித்து அதிபர் ஒருவர் முயன்றும் வளர்ச்சியை அடைந்துவிட முடியாது மாணவர், ஆசிரியர், பெற்றோர், நலன் விரும்பிகள், உயரதிகாரிகள் எனப் பலதரப்பட்டவர்களும் ஒத்துழைப்பதன் மூலமே அந்த இலக்கை அடைய முடியும்.''

கொழும்புத்துறை சென். ஜேசப்ஸ் வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோருடனான கலந்துரையாடலின் போது யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விப்பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பன்முகப்பட்ட ஒத்துழைப்பைப் பெறுவதில் காணப்படும் வெற்றியே அதிபர் ஒருவரின் நிர்வாகத்திறனை வெளிப்படுத்துகின்றது.

அவ்வகையில் இந்தப் பாடசாலையின் அதிபர் திரு அல்பிரட் ஏனைய பாடசாலை அதிபர்களுக்கும் கூட சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றார்.

இப்பகுதிப் பெற்றோர் வறுமைக் கோட்டின் எல்லைக்குள் வாழ்பவர்களாக இருந்தபோதிலும் நாற்பதாயிரம் ரூபா செலவில் சுற்றுமதில அமைத்துக் கொடுத்ததற்கு பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

பெற்றோரின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் பாடசாலைக்குக் கிடைக்கக் கூடிய மாபெரும் சொத்துக்கள்.''

இவ்வாறு கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

திருவாளர்கள் ஜே. எஸ் அழகையா, எஸ். செபஸ்தியாம்பிள்ளை. பீ. யாட்டின், சி அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் வைபவத்தில் கருத்துரை வழங்கினர்.

பாசையூர் பங்குத் தந்தை சார்பில் கலந்து கொண்ட வண பிதா சந்திரபோஸ் அடிகளார் ஆசியுரை வழங்கினர்.

உப அதிபர் திரு எஸ் ஈ பெர்ணாண்டோ நன்றி கூறினார். (இ 51)

## வரிப்பணம் அறவிடுவோர் கஷ்ட நிலை

கொடிகாமம், ஏப் 5

கொடிகாமம் மத்திய சந்தையில் வரிப்பணம் பெறும் ஊழியர்கள் சந்தை வாயில்களில் நின்ற நிலையில் தவம் இருந்து வரிப்பணம் பெறுகின்றனர்.

இவர்களுக்காக வாயில்களில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த சிறு பாதுகாப்பு கொட்டில்கள் சேதமடைந்திருப்பதே இதற்குக் காரணம். (இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IDP**
('nstitute of Data Processing)
புதிய COMPUTER பிரிவுகள்!!
ஆரம்பமாகின்றன
கிளைகள்:
★ IDP - C/o. BON INSTITUTE Stanley Road, Jaffna
★ IDP - C/o MODERN EDUCATION CENTRE, Karaveddy.
★ IDP - DHURGA PURRAM, Tellippalai.

# உதயன்

05-04-1988 செவ்வாய்க்கிழமை

**IDP**
(Institute of Data Processing)
உலகப் புகழ்பெற்ற IBM உட்பட பல COMPUTERகளில்!!
COMPUTER PROGRAMMING IN BASIC, COBOL and FORTRAN Languages Training வழங்கப்படுகின்றன.

எமது
## புதிய வெளியீடுகள்

1. ரகுவரன்—நதியா—செந்தில்
★ இரண்டில் ஒன்று ★
2. ராஜேந்தர்—ஸ்ரீவித்யா
★ என் தங்கை கல்யாணி ★
3. சரண்ராஜ்—ரேகா
★ கழுகுமலைக் கள்ளன் ★
4. பிரபு—அம்பிகா—சிவகுமார்
★ ஒருவர் வாழும் ஆலயம் ★
5. சோபன்பாபு—மாதவி
★ திரிலோக சுந்தரி ★

என்றும்
தரமான பிரதிகளுக்கு

**குணம்**
**வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

## வட்டுக்கோட்டையில் அநேக கிராமங்கள் சுற்றி வளைத்துத் தேடுதல்

வட்டுக்கோட்டை, ஏப் 5

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த சுழிபுரம், பண்ணாகம், சித்தன்கேணி, சங்கானை, வடலியடைப்பு காலையடி, பனிப்புலம், பிரான்பற்று, பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதிகள் நேற்று அதிகாலை 6 மணி முதல் இந்திய அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

திங்கள் அதிகாலை 4 மணியளவில் ஒலிபெருக்கி மூலம் ஊரடங்கு அமுல்படுத்துவதாக அமைதிப்படையினரால் அறிவிக்கப்பட்டது.

இத்தேடுதல் வேட்டையின்போது பிரதான வீதியில் போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் [ஞாயிறு] பண்டத்தரிப்புப் பகுதியில் மூன்று இளைஞர்கள் அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து நேற்று இந்த ஊரடங்கும் சுற்றி வளைப்பும் தேடுதலும் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டது.

[ஒ-161]

### குருநகர்- - -

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சங்கத்துடன் தொடர்பு கொண்டு வருமாறு தெரிவிக்கப்பட்டது

செய்தி எழுதும்வரையில் மூன்று மீனவர்களையும் அமைதப்படை விடுதலை செய்யவில்லை.

(இ-51)

### மேலும்...

செய்யப்பட்டுள்ளது.

இவ்வங்கிக் கிளைகளில் இருந்து நகைகளை மீட்க விரும்புவோர் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் பணத்தைச் செலுத்த வேண்டும் என்று முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[ஒ-9]

### ராமானுஜம்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தப்பட்டுள்ளன.

5 விசேஷ தற்காலிக பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன

இந்த தங்குமிட முகாமின் ஏற்பாடுகளை யாழ் அரச அதிபரின் பணிப்பின் பேரில் யாழ் மேலதிக அரச அதிபர் திரு. இராமநாதன், தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு நிர்வாக அதிகாரி திரு. பி இராசையா, காங்கேசன்துறை கிராமசேவையாளர் திரு. மு. கனகநாயகம் ஆகியோர் கொண்ட குழு கண்காணிக்கும்—

அகதிகளுக்கான உணவு விநியோகத்தை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கமும், தண்ணீர் விநியோகத்தை காங்கேசன்துறை சீமெந்து லிமிட்டெட்டும், கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நியூகோ ஸ்தாபனமும் மேற்கொள்ள ஏற்பாடாகி உள்ளது.

(இ-68)

### தமிழர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை நிறைவேற்றி இருக்கிறது

ஆகையினால் இனிமேல் அரசமைப்புக்குக் கொண்டுவரப்படும் உத்தேச 14 ஆவது திருத்தம் தமிழர் பிரதிநிதிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் இணக்கம் பெறப்பட்டபின்னரே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழர் பிரதிநிதிகளுக்கு இணக்கமான 14 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று இந்தியா தகுந்த உறுதிமொழியை வழங்குமானால் நாம் ஆயுதங்களை ஒப்படைத்து பேச்சுவார்த்தை நடத்தத் தயார்.

(அ-உ)

### புதிய..

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள்—3 லீட்டர்

★ 90 முதல் 125 சிசி வரையான ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிளுக்கு — 5 லீட்டர்

★ மூன்று சக்கர வாகனங்களுக்கு — 10 லீட்டர்.

★ வாடகைக்கார்களுக்கும் - 15 லீட்டர்.

★ மினிபஸ்கள் 25 லீட்டர்.

★ லொறிகள் — 30 லீட்டர்.

★ 2 சக்கர டிராக்டர்கள் - 10 லீட்டர்.

★ 4 சக்கர டிராக்டர்கள் -20 லீட்டர்.

எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சிக் குதங்களில் கையிருப்பு நிலைமை சீராகும்வரை இந்த பங்கீட்டுமுறை நீடிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது

[இ-எ]

## நீத்தார் பட்டியல்

### தாமோதரம்பிள்ளை மகேந்திரன்

தாமோதரம்பிள்ளை மகேந்திரன் (இலங்கை அபிவிருத்திப் பொறியியல் கம்பனியின் இளைப்பாறிய காரியாலய முகாமையாளர் CDE) 3-4-88இல் காலமானார். இவர் காலஞ்சென்ற ஞானமணி தாமோதரம்பிள்ளை தம்பதியினரின் இளைய புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கௌரிமனோகரி (அமெரிக்கா), இராஜமனோகரி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வர்த்தகபீடம்] ஆகியோரின் அன்புத் தகப்பனும், சத்தியகுமாரின் (பொறியியலாளர், அமெரிக்கா) அன்பு மாமனும், ஜெயனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தனஞ்செயன், மதிதயன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இறுதிக் கிரியைகள் 4-4-88 அன்று அவரது இல்லத்தில் 2 மணிக்கு நடைபெற்றது உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

நெய்யம்புலம்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
க. கணேசலிங்கம்
(2738)

### திருமதி லூட்ஸ் சவரிமுத்து

சரம்பையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லூட்ஸ் சவரிமுத்து 3—4—88 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு வ சவரிமுத்துவின் அன்பு மனைவியும், செலஸ்ரீன் சின்னத்துரை, செடிஸ் அலோசியஸ் (கனடா), ராஜகாரியர், ராஜநாயகம், திருநாயகம், காலஞ்சென்ற எட்மன் மரியநாயகம், அருமைநாயகம், துரைநாயகம் (லண்டன்) ஆகியோரின் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை அலோசியஸ் (கனடா), கொலஸ்ரிக்கா, சவுந்தரி, ராஜேஸ் (சவுதி), புஸ்பம், சரோ (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரான்சிஸ் சேவியர் (சேவி கண்ணாடித் தொழிற்சாலை, நீர்வேலி —உரிமையாளர்), அஞ்சலீனா விக்டர், அன்ரனி (நிற்வெயா லிமிட்டெட், கோப்பாய்), புளோரா அஞ்சலோ (கனடா), அசந்தா, யசிந்த தனராஜா, நியுட்டா (லண்டன்), பின்ரா (கனடா), சவிஸ்ரன் (கனடா), லோறிற்ரு (ஜேர்மன்) றெசிற்ரு, கவிஸ்ரா (லண்டன்) றேசன் (கனடா), டக்லஸ் ஜெனிற்ரா, டெலானி, மிலானி, மாலினி, ஜெசிற்ரா (கனடா), வினிற்ரா, பேபி, அனிற்ரா, தாரணி, சந்திரிகா, டிடியா, டிலோஜன், ரெஜீன், றெனீன், நோட்டன், செல்ரன், காமினி, ரேஜினி, ஜெனசன், மார்க், ஜோசன் லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ரெறன்ஸ், லின்ரா, லறி லண்டன் நெயலின், டார்லின், பேவின், நீல் ஹறி (லண்டன்), ஜெனி (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார் அன்னாரின் பூதவுடல் 6-4-88 காலை 9 மணிக்கு றக்கா றோட், திரேசம்மா ஆலயத்தில் திருப்பலியுடன் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திருமதி சின்னத்துரை
இல 50 றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
(2746)

### திரு. அந்தோனி ஆசீர்வாதம்

(இளைப்பாறிய துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர்)

திரு. அந்தோனி காலமானார். இவர் நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு-13, விவேகானந்தா மேடு, இல. 90/3ஐ வதிவிடமாகக் கொண்டவரும், பிலோமினாவின் அன்புக் கணவரும, கிறேசியன் (ஜேர்மனி), அன்ரனி (கனடா), ஜோர்ஜ் (நோர்வே), ஜோன்ஸன் (ஜேர்மனி), நிக்ஸன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், லூர்ஸ்லதாவின் (ஜேர்மனி) அன்பு மாமனும், வோல்டர் ஜெமினியின் (ஜேர்மனி) பேரனுமாவார். இறுதிச் சடங்குகள் நாரந்தனையில் நடைபெறும் திகதி பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு
(2422)

தகவல்:
பிலோமினா
(மனைவி)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி நாகமணி சின்னத்தம்பகம்

தோற்றம்: 1912 6 15 மறைவு: 1988 - 3 - 6

எங்கள் குடும்ப விளக்கின் ஈமக்கிரியைகளின் போது வருகை தந்தவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இவ்வைபவத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

1988 4-5 இல் [இன்று] அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிரியையிலும் பங்குபற்றிச் சிறப்பிக்கு வண்ணம் உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி.

இங்ஙனம்
சகோதரர்கள், பெருமக்கள்.
(2745)

**National Multy Service**
**நஷனல் மல்ரி சேவிஸ்**

பாஸ்போட், ரிக்கற், விசா, அடையாள அட்டை, வாகன லைசன்ஸ் முதலியவற்றைத் துரித கெதியில் எடுப்பதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தற்போது உடனடியாக பணிப்பெண்கள் தேவை.

சவூதி அரேபியா — 400 Rials
சிங்கப்பூர் — 200 Dollars

ஒரு வாரத்தில் அனுப்பி வைக்கப்படும். முற்பணம் எதுவும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முகவரி:
**NATIONAL MULTY SERVICE**
(முனீஸ்வரா கபே-மேல்மாடி)
K K S. ROAD, CHUNNAKAM.
(2404)

**தென்னைப் பயிர் செய்கைச் சபை**
பளை
**தென்னை ஓலை விற்பனைக் கேள்விகள்**

பின்வரும் தோட்டங்களில் 1-4-88 தொடக்கம் 31-3-89 வரையான காலப்பகுதியில் விழு தென்னை ஓலைகளான கேள்விகள் வரவேற்கப்படுகின்றன.

1. தர்மகேணி தோட்டம் 318 ஏக்கர்
2. வண்ணான் கேணி தோட்டம் 30 ஏக்கர்.

இது சம்பந்தமான விதிமுறைகளுக்கும் மேலதிக விவரங்களுக்கும் பளை தென்னை அபிவிருத்திஉத்தியோகத்தருடன் தொடர்பு கொள்க.

விண்ணப்ப முடிவு திகதி 15-4-88

தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர்
பளை
[2427]

**Further Education Programme**
**Uduvil Girls' College**

பயிற்சி நெறிகள்

1. Data Processing Computer Programming
2. Word Processing (London)
3. Stenography (London)
4. English (National Certificate-Examination London—Sri Lanka)
5. Home Economics
6. Professional English Course

மாணவருக்கு விடுதி வசதி உண்டு.

விண்ணப்ப முடிவு: 20-4-88
விண்ணப்பதாரிகள் திங்கட்கிழமை (25-4-88) சமுகமளிக்கவும்.
DIRECTRESS

### திரு. செ. நவரத்தினராசா

அராலி தெற்கைச் சேர்ந்தவரும், தற்போது ஐயனார்கோவிலடியில் வசிப்பவருமான திரு. செல்லத்துரை, காலஞ்சென்ற திருமதி அன்னம்மா தம்பதியினரின் புதல்வன் திரு.நவரத்தினராசா (ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்) 2-4-88 இல் காலமானார். இவர் நாகரத்தினம்மாவின் அன்புக் கணவரும், கயிலைவாசன் (U. K.), ஆனந்தவாசன் (FRANCE), வதனாதேவி (CONVENT) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதேவியின் அன்பு மாமனும் திரு லிங்கநாதபிள்ளை, திருமதி கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. பரம்சோதி, திருமதி மகாலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5-4-88) காலை 11-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி தெற்கு.
(2734)

தகவல்:
மனைவி, மக்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 5-04-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Tuesday, 5th April 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org